(ஓ) கோரிக்கை எண்.57—சாலைப்போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 57 - சாலைப் போக்குவரத்துப் பணிகள் - கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு.

வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு.சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சாலைப் போக்குவரத்துப் பணிகள் - கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 57-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 21.23,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (8-4-94) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3.15 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

93. பம்பாயிலுள்ள திருவாளர்கள் டைமன் அண்டு ஜெம் டெவெலப்மென்ட் கார்ப்பரேஷன் வாங்கிய இயற்கை வண்ண மணிக்கற்களுக்கு வரிவிதிப்பில் இருந்து விலக்களிப்பது குறித்து, வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின்

1994 ஏப்ரல் 7]

5-3-1992-ஆம் நாளிட்ட 103-ஆம் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது'.

94. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 5-11-1993-ஆம் நாளிட்ட 379-ஆம் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்

57. 1985-86-ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். (தமிழ், ஆங்கிலம்)

58. 1985-86-ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான கூடுதல் மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு.

59. 1985-86-ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்).

60. கோரிக்கை எண்.3 - மோட்டார் வண்டிகள் சட்டங்கள் — நிருவாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95 (தமிழ், ஆங்கிலம்).

61. கோரிக்கை எண்கள் 39 மற்றும் 57-சாலைப் போக்குவரத்து பணிகள் கப்பல் போக்குவரத்து மற்றும் சாலைப் போக்குவரத்து பணிகள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ்,ஆங்கிலம்)

62. கோரிக்கை எண்கள் 39 மற்றும் 57-நாட்டுடைமையாக்கப்பட்ட சாலைப் போக்குவரத்து கப்பல் போக்குவரத்து குறித்த சாதனை பற்றிய ஆய்வுக் குறிப்பு, 1994-95 (தமிழ், ஆங்கிலம்)

63. தமிழ்நாடு துறைமுகத்துறை பற்றிய சாதனை விளக்க அறிக்கை, 1994-95 (தமிழ், ஆங்கிலம்)

64. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஐம்பத்தி ஐந்தாவது அறிக்கை, 1993-94.

65. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஐம்பத்தி ஆறாவது அறிக்கை, 1993-94.

66. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஐம்பத்தி ஏழாவது அறிக்கை. 1993-94.